முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், திருப்பூர்

அசல் வழக்கு எண். 185/2020

இன்று 2025 ம் ஆண்டு ஜுலை திங்கள் 11 ம் நாள் இன்று இந்த பி.வா.சா.1 ன் வாக்குமூலம் (1969 ஆம் ஆண்டு 54 வது பிரிவின் ஏற்பாட்டின்படி) திரு.A.வனிதா, M.S.W., L.L.B., அவர்களால் ஆணையிட்டு உறுதிமொழி செய்யப்படுகிறது.

| | | | |
|---|---|---|---|
| பெயர் | : பாலசுப்பிரமணியம் | தொழில் | : |
| தகப்பனார் பெயர் / கணவர் பெயர் | : ராஜமாணிக்கம் | கிராமம் | : பொங்குபாளையம் |
| வயது | : 58 | தாலூக்கா | : திருப்பூர் |
| நாள் | : 11-07-2025 | மாவட்டம் | : திருப்பூர் |

சாட்சி மீண்டும் முன்னிலையாகி சத்தியப் பிரமாணம் செய்யப்பட்டு வாதி தரப்பில் குறுக்கு விசாரணை :

1. நான் ராஜமாணிக்கம், தாயார் அவர்களின் மூத்த மகன் என்றால் சரிதான். என் அப்பா என்ன தொழில் செய்து வந்தார் என்றால் பனியன் கம்பெனியில் பணியாற்றி வந்தார். என் தாயார் மெஸ் வைத்து நடத்தி வந்தார். என் பெற்றோரின் சம்பாத்தியத்தில் வேலம்பாளையம் கிராமம் அனுப்பர்பாளையம் முத்துகோபால் நகரில் என் தாயார் பெயரில் சொத்து கிரயம் வாங்கினார்கள் என்றால் சரிதான். என் அப்பா இறந்த பிறகு அந்த சொத்தை விற்று தான் என் தாயார் தாவாச் சொத்தை கிரயம் பெற்றார் என்றால் சரிதான்.

2. தாவாச் சொத்தில் வீடு கட்ட நானும் என் மற்ற சகோதரர்களும் பணம் கொடுத்தோம் என்றால் சரிதான். என் தாயார் இறக்கும் வரையில் அவர் அனைத்து வாரிசுகளையும் சரிசமமாக பாவித்து, திருமணம் செய்து வைத்தார் என்றால் சரிதான். என் சகோதரி கௌசல்யா உயில் சாசனம் உள்ளதாக வழக்கில் சொல்லி உள்ள உயிலை நான் பார்த்துள்ளேனா என்றால் இல்லை. என் தாயார் உயில் சாசனம் எழுதி வைக்கவேண்டிய அவசியமில்லை என்றால் சரிதான். அந்த உயில் சாசனம் சந்தேகத்திற்குரிய ஆவணம் என்றால் சரிதான்.

3. கடந்த 2017 ம் ஆண்டு உயில் எழுதி வைத்ததாக சொல்லப்படும் காலத்தில் என் தாயார் உடல்நலம் சரியில்லாமல் இருந்தார் என்றால் சரிதான். வாதி கோரியபடி தாவாச் சொத்துக்களை 5 பாகங்களாக பிரித்து வாதிக்கு ஒரு பாகம் கொடுக்க எனக்கு ஆட்சேபணை எதுவும் இல்லை என்றால் சரிதான். 2 மற்றும் 3 பிரதிவாதிகளின் எதிர்வழக்குரை மூலம் தான் எனக்கு உயில் சாசனம் உள்ளதாக கௌல்சா சொல்லும் விவரம் தெரியும் என்றால் சரிதான். அதற்கு முன்பு வரை அந்த உயில் ஆவணம் பற்றி எனக்கு தெரியாது என்றால் சரிதான்.

4. 2 மற்றும் 3 பிரதிவாதிகளின் எதிர்வழக்குரை தாக்கல் செய்வதற்கு முன்பு வரை 4 ம் பிரதிவாதி ஏதோ ஒரு ஆவணம் இருப்பதாகவும் தாவா சொத்தை காலி செய்யும்படியும் சொல்லி வந்தார் என்றால் சரிதான். தாவாச் சொத்தில் வாதியும். 4 ம் பிரதிவாதியும் தான் வசித்து வருகிறார்கள் என்றால் சரிதான். தாவாச் சொத்துக்கு அருகில் என் வீடு உள்ளது என்றால் சரிதான். அதை விற்பனை செய்து விட்டு நான் கடந்த 2 ஆண்டுகளுக்கு முன்பு பெங்களூர் சென்று விட்டேன் என்றால் சரிதான்.

5. என் தாயாரின் 4 ம் நாள் காரியத்தின்போது உயில் சாசனம் என்னிடம் இருந்ததாகவும் அதை 4 ம் பிரதிவாதி கொடுத்ததாகவும், நான் அதன் நகல்களை வைத்துக் கொண்டதாகவும் 2 முதல் 4 பிரதிவாதிகள் சொல்லும் விவரங்கள் பொய்யானது என்றால் சரிதான். தாவாப்படி தீர்ப்பாக எனக்கு ஆட்சேபணை இல்லை என்றால் சரிதான்.

சாட்சி கூறியபடி என் வாய்மொழிப்படி தட்டச்சரால் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்து காட்டப்பட்டு, அவரால் சரியென்று ஒப்புக்கொள்ளப்பட்ட பின்னர் அவரது கையெழுத்துப் பெறப்பட்டது.

Sd/-A.Vanitha
முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிபதி
திருப்பூர்.